தபோவனம்
ECO WELL-BEING VENTURE

# தபோவனம்



5-7-2025 சிறுவர்களுக்கான நிகழ்வு







## ➤ கடற்கரை சுத்திகரிப்பு

காலை 9-9.30 எமது சிறுவர்களால் கடற்கரை சுத்திகரிப்பு பணி நடை பெற்றது.



**கடல் மாசு** – தபோவன கடற்கரையில் ஒரு நாளில் சேகரிக்கப்பட்ட பிளாஸ்ரிக் மற்றும் கழிவுப் பொருட்கள்

## ➢ நீச்சல் பயிற்சி

காலை 9.30-11 சமுத்திரவியல் பல்கலைகழக பயிற்றுவிப்பாளர் திரு கிறிஸ்து ராஜா வால் வசதிபடுத்துனர்கள் மற்றும் பெண்களுக்கான நீச்சல் பயிற்றுவிக்கப்பட்டது. அதே நேரம் சிறுவர்களும் கடற்கரையில் விளையாடினார்கள்.













# புத்தகப்பை வழங்குதல்

காலை 11.30 - 1.30 சிறுவர்களுக்கான புத்தகப்பை வழங்கும் நிகழ்வு

## நிகழ்வில் தலைமை வகித்தவர்கள்

- **பேராசியர்.டொக்டர்.தயா சோமசுந்தரம்** (வாழ்நாள் பேராசியர்)
- **அருட்தந்தை டேமியன்**
- **அருட்தந்தை ஜெயசீலன்**
- **சுதீபன்** (உளவளத்துணையாளர் ஊர்காவற்துறை பிரதேச செயலகம்)
- **சிவானி** (CCH,EASE)
- **உதயனி** (கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் )
- **கிறிஸ்து ராஜா** (சமுத்திரவியல் பல்கலைகழக நீச்சல் பயிற்றுவிப்பாளர்)
- **கௌரவ நி.ரேனுகா** (வேலனை பிரதேச சபை உறுப்பினர்)

## கலந்து கொண்டோர்

- சிறுவர்கள்
- வசதிபடுத்துனர்கள்
- பெற்றோர்கள்

## சிறுவர்களுக்கு புத்தகப்பையை நன்கொடையாக வழங்கியவர்கள்

- திருமதி ஸ்ரீஉஷா நல்லையா
- திருமதி கேதீஸ்வரி கிருபராஜன்
- திருமதி அம்பிகா ரட்ணசபாபதி

# 1. மங்கள விளக்கேற்றல்











## 2. இறைவணக்கம்



## 3. ஆசி உரை





**அருட்தந்தை டேமியன் :**

*"நன்றாக கல்வி பயின்று நல்ல பழக்கவழக்கங்களை பழகி நற்பிரஜைகளாகி அல்லைப்பிட்டியை முன்னேற்ற வேண்டும்."*

# 4.கலந்துரையாடல்

## மது போதைப்பொருள் பாவனையினால் சிறுவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சனையை குறைக்க எடுக்க கூடிய முயற்சிகள்






**தயா சோமசுந்தரம் :** *“நான் அல்லைப்பிட்டிக்கு வந்து 40 வருடங்களாகின்றன. போரின் அவலங்கள், இடம் பெயர்வு, இறப்புக்கள்,கோவிட் பொருளாதார நெருக்கடிகள் ஆகியவற்றுடன் மிக கவலையனது வளர்ந்த ஆண்களின் மது பாவனை. பொருளாதார ரீதியாக, ஒருநாளுக்கு 3/4 போத்தல் சாராயம் ரூபா 2000 வீதம் ,ஆண்டுக்கு (தவக்கால ஒன்றரை மாதம் தவிர்ந்த) ரூபா 6 லட்சம் செலவு. குடும்பத்துக்கு வறுமையுடன் கடன், மேலும் வீட்டு வன்முறை, சமூக சண்டைகள் அல்லைப்பிட்டியை முன்னேற விடாமல் தடுக்கின்றது இந்த மதுப்பேயின் ஆட்டம். இந்த மதுப்பேயை அல்லைப்பிட்டியிலிருந்து ஓட்டலாமா? ”என்று அருட்தந்தை ஜெயசீலனை வேண்டினார்.*



**அருட்தந்தை டேமியன்:** *“குடி குடியைக் கெடுக்கும்” என்ற பழமொழியை விளக்கினார். “இதில் முதலில் வரும் குடி மதுவையும் மற்ற குடி குடும்பத்தையும் குறிக்கின்றது. மதுகுடிப்பதனால் அவரது உடலிலும் மனதிலும் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல் குடும்ப வாழ்க்கையும் சீரழியும்.”*



**சிறுமி சுஜானி :** *“நாங்கள் எமது பெற்றோர்களுடன் கதைத்து அவர்களின் மதுப்பாவனையை குறைக்க சொல்லுவொம்.”*

# 5.சிறுவர்களுக்கான புத்தகப்பை வழங்குதல்.













# 6. சத்துணவு





## 1.கொழுக்கட்டை

பயறு
தேங்காய்ப் பூ
கச்சான்
சக்கரை
சிவப்பு அரிசி மா

## 2.சவ்வரிசி பாயாசம்

சவ்வரிசி
தேங்காய் பால் கச்சான்
முந்திரி பருப்பு
சேமியா
காய்ந்த திராட்சை
ரின்பால்

பாலசுப்பிரமணியம் கனகரத்னம் அவர்களது 4 வது திதி நினைவாக எமது சிறுவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டது.

*இறுதியில், சகலருக்கும் சத்துணவு வழங்கப்பட்டது.*

# 7.நன்றியுரை



**கட்டிளமைப்பருவ பயனாளி கின்சிலி :**

*“நாங்கள் புத்தகப்பை வாங்க முடியாமல் இருந்தோம். இந்த புத்தகப்பையை பெற்று மிகவும் மகிழ்ச்சி அடைந்தோம். நாங்கள் வீட்டிலிருந்து வரும் போது சாப்பிடாமல் வருகின்றோம். தபோவனத்தில் உணவு தருவார்கள். அதே சமயத்தில் சத்தான உணவை உண்கின்றோம்.”*

# நன்றி

